# கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

**OS.No. 50/2024**

திரு. வரதராஜன் (P.W. –1) **02.07.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. எனக்கு 1 ம் பிரதிவாதி நாகமணியை தெரியாது என்று சொன்னால் நேரடியாக பார்த்ததில்லை. என்னுடைய முன் கிரையதாரர் என்ற முறையில் ஆவணங்களின் அடிப்படையில் தெரியும். 1 ம் பிரதிவாதி 14.08.2012 ம் தேதி தாவா சொத்தை பொறுத்து ஒரு கிரைய உடன் படிக்கை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அது பற்றி எனக்கு தெரியவரவில்லை. அந்த ஆவணம் வா.சா.ஆ–18 எந்த சூழ்நிலையில் எப்போது எழுதப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. அந்த உடன்படிக்கை பத்திரத்தின் படி 1 ம் பிரதிவாதி தாவா சொத்தின் சுவாதீனத்தை 2 ம் பிரதிவாதிக்கு கொடுத்து அவர் சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு கிரையம் கொடுத்தவர் தான் சுவாதீனத்தில் இருந்து வந்தார். கிரைய உடன் படிக்கை பத்திரத்தின் படி 2 ம் பிரதிவாதிக்கு சுவாதீனம் கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது என்று சொன்னால் அந்த உடன் படிக்கை பத்திரம் பதிவு செய்யப்படாதது என்பதால் சுவாதீனம் கொடுக்கப்பட்டதா என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு விற்பனை செய்தவர் எனக்கு முன்னால் சுவாதீனத்தில் இருந்ததாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் எனவும் 2 ம் பிரதிவாதிதான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

3. எனக்கு கிரைய கொடுத்த நபருக்கு கிரையம் கொடுத்த வெங்கடேஷ் என்பவருக்கு எந்த சூழ்நிலையில் 1 ம் பிரதிவாதி கிரையம் எழுதிக்கொடுத்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் ஆவணத்தின் அடிப்படையில் தான் தெரியும் நேரடியாக

தெரியாது என்றால் சரிதான். அதேபோல் சிவசாமி என்பவருக்கு வெங்கடேஷ் என்பவர் எந்த சூழ்நிலையில் தாவா சொத்தை கிரையம் செய்து கொடுத்தார் என்ற விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு 1ம் பிரதிவாதி கிரையம் உடன் படிக்கை செய்து கொடுத்த விவரமும் அதன் பேரில் 2ம் பிரதிவாதிக்கு நீதிமன்றம் மூலம் கிரயம் செய்து கொடுத்த விவரமும் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் 13.09.2023 ம் தேதியன்று சார் பதிவாளர் அலுவலகத்தில் இருந்து எனக்கு அறிவிப்பு வந்தபோது தெரியவந்தது. அன்றைய தேதியில் கிரையம் ஆகவில்லை 2ம் பிரதிவாதி கிரையம் செய்ய கோரியுள்ளதாகதான் அறிவிப்பு வந்தது கிரயம் ஐந்து மாதம் கழித்து 24.01.2024 ம் தேதியன்று தான் செய்யப்பட்டுள்ளது.

4. எதற்காக அறிவிப்பு வந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் ஆவணங்கள் அனைத்தும் என்னுடைய பெயரில் உள்ள நிலையில் சம்மந்தம் இல்லாத ஒரு நபர் கிரையம் செய்ய கோரியுள்ளதால் எனக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளதாக கூறிய விவரத்தை தெரிந்து கொண்டேன். எனக்கு வந்த வா.சா.ஆ– 27 ல் அறிவிப்பில் இவ்வலுவக நிலுவை ஆவணத்தின் படி முதலிபாளையம் கிராமம் க.ச.எண். 114/1பி1 ல் பு.தோ.ஏ.1.00 மற்றும் மேற்படி கிராமம் க.ச.114/1பி1 ல் பு.ஏ.0.50 சொத்தானது திருப்பூர் மாண்பமை முதன்மை நீதிபதி அவர்களால் திரு. வரதராஜன் என்பவருக்கு கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு நிலுவை வைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணப்பதிவு தொடர்பாக தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் தாங்கள் இவ்வலுவலகத்தில் உரிய ஆவண ஆதாரங்களுடன் நேரில் 22.09.2023(வெள்ளிக்கிழமை) அன்று பிற்பகல் 2 மணியளவில் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று அப்போது ஆட்சேபனை தெரிவித்தேன் என்றால் சரிதான். அதற்குபின்னிட்டு நான் சார் பதிவாளர் அலுவலகத்திற்கு தடங்கல் மனு கொடுக்க சென்றேனா என்றால் அந்த தடங்கல் மனுவில் நான் கிரையம் பெற்ற விவரத்தை எல்லாம் கூறி வரதராஜன் பெயருக்கு கிரயம் செய்ய கூடாது என்று கூறியிருந்தேன் என்றால் சரிதான். அதன் பின்னர் எத்தனை முறை சென்றேன் என்றால் அதன் பின்னர் செல்லவில்லை. அதன் பின்னர் 2ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பின்னர் கிரையம் பற்றி எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் கிரையம் செய்து ஒரு வாரத்திற்கு பின்னர் தெரியவந்தது.

6. தடங்கல் மனு கொடுத்து பத்திரம் பதிவு செய்து இருந்தால் அதன் பேரில் நான் மாவட்ட பதிவாளரிடமோ அல்லது சென்னை மேல் அதிகாரியிடமோ மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்று சொன்னால் நான் இவ்வழக்கில் அவர்களை சேர்த்துள்ளேன். தனிபட்ட முறையில் நான் சார் பதிவாளர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியின் கிரைய ஒப்பந்தத்திற்கு பின்னிட்டு தான் என்னுடைய கிரையம் பத்திரமோ எனக்கு முன்னர் கிரையம் பெற்றவர்களின் பத்திரமும் பதிவு செய்யப்பட்டுயிருந்ததால் தான் 2ம் பிரதிவாதியின் பெயரில் கிரையம் பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் அது பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்தம் என்பதால் கிரையம் எப்படி பதிவு செய்யப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

7. அதன் பின்னிட்டு எனக்கு விற்பனை செய்தவர்கள் மீது மோசடி குறித்து நடவடிக்கை எடுத்தேனா என்றால் அவர்கள் நல்லெண்ணத்தின்

அடிப்படையில் கிரையம் பெற்றவர்கள் என்பதால் நடவடிக்கை எடுக்கவில்லை. சிவசாமி என்பவர் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றவர்கள் என்பதை எவ்வாறு கூறிகிறீர்கள் என்றால் அவர் என்னுடைய நண்பரின் நண்பர் அவரை தெரியும் என்பதால் கூறுகிறேன். அவர் கிரையம் பெற்ற சமயத்தில் நான் உடன் இருக்கவில்லை என்றால் சரிதான்.

8. சிவசாமி நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றுள்ளார் என்பதை அவரிடம் வாக்குமூலமாக பெற்று இந்நீதிமன்றத்தில் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பதிவு பெற்ற கிரைய ஆவணம் உள்ளதால் அது தேவையில்லை. சிவசாமிக்கு கிரையம் கொடுத்த வெங்கடேஷ் பார்த்தேனா என்றால் அவரும் நல்லெண்ணத்தின் அடிப்படையில் கிரையம் பெற்றவர் என்பதால் அவரை பார்க்கவில்லை. வெங்கடேஷ் கிரைய ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்த செந்தில், ரகுவரன் ஆகிய நபர்களை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. அந்த நபர்கள் இரண்டு கொலைகளை செய்தவர்கள் என்று 2ம் பிரதிவாதி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் பின்னர் படித்துபார்த்துள்ளேன். எனக்கு விற்பனை செய்தவர்கள் நல்லெண்ணத்தில் அடிப்படையில் விற்பனை செய்தவர்கள் என்று கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய கிரைய ஆவணத்தில் க.ச.எண். 114/1ஏ ல் கிணறு உள்ளதாக குறிப்பிடப்படவில்லை என்றால் என்னுடைய இடத்தில் கிணறு இல்லை. ஆனால் நான் என்னுடைய வழக்குரையில் கிணறு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் குறிப்பிடப்பட்டுள்ளது.

10. ஆகவே, என்னுடைய வழக்கின் சொத்து விவரமே தவறு என்று சொன்னால் சரியல்ல. ஆகவே, 2ம் பிரதிவாதி தான் தாவா சொத்தின் உண்மையான கிரையதாரர் எனவும் அவர் தான் சுவாதீனத்தில் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. நான் தான் சுவாதீனத்தில் உள்ளேன். கேமராவும் பொருத்தியுள்ளேன். மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியும் ஆனால் பாக்காமல் கூற இயலாது. நான் கூறும் மின் இணைப்பு எண். வரதராஜ் பெயரில் உள்ளது என்றால் நான் தடங்கல் மனு கொடுத்த பின்னிட்டு தடை உத்தரவு வழங்கப்பட்ட பின்னரும் என் பெயரில் இருந்து வரதராஜ் பெயருக்கு மாற்றம் செய்துள்ளனர். அதனால் அதன் பேரில் மனு கொடுத்துள்ளோம்.

11. உண்மையில் வரதராஜ் சுவாதீனத்தில் இருந்து வந்ததால் மின் இணைப்பை அவர் பெயரில் மாற்றியுள்ளார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் தான் சுவாதீனம் உள்ளது. சாவியும் என்னிடம் தான் உள்ளது. எனக்கு விற்பனை செய்தவர்களும் அவர்களுக்கு விற்பனை செய்தவர்களும் போலியான ஆவணங்களை தயார் செய்துள்ளார்கள் எனவும் நானும் அவர்களுக்கு உடந்தையாக இருந்துள்ளேன் என்றும் அதனால் அவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஆகவே, என்னுடைய வழக்கு நிலைக்கத்தக்கதல்ல செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

UMA MAHESHWARI Digitally signed by UMA MAHESHWARI Date: 2026.07.02 18:42:10 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.